மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: **திரு.T.கோகுலகிருஷ்ணன் B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

**2022**ம் வருடம் **ஜூலை** மாதம் **13**ம் நாள்

**சுபகிருது** ஆண்டு **ஆனி** மாதம் **29**ம் நாள் **புதன்** கிழமை

CNR No. TNMD19000079-2018

I.A . No. 439/2020

in

O.S. No. 69/2018

K. சுப்பிரமணியன்

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. சவுந்தரலதா
2. சங்கர் கணேஷ்

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு **18.03.2020**ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.செல்லத்துரை** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.J.ஜான்** அவர்கள் ஆஜராகியும், கடந்த **06.07.2022டி**தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

## உத்தரவு

மனுதாரர்/வாதியால், அசல் வழக்கினை திருத்தம் செய்ய வேண்டி கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்:

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார் என்றும், தாவா சொத்தின் அருகிலுள்ள இடத்தின் உரிமையாளர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆவார் என்றும், தாவா சொத்தில் பிரதிவாதியானவர் எந்த வித ஆக்கிரமிப்போ இடைஞ்சலோ செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையிலிருக்கும் போது, மனுதாரர்/வாதி வெளியூர் சென்றிருந்த போது அத்துமீறி சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதியின் பழைய வீட்டின் வடக்குப்பக்க சுவரை தாண்டி 3 அடி அகலம், 32 அடி நீளத்திற்கு சுவர் எழுப்பி மனுதாரர்/வாதிக்கு சொந்தமான இடத்தில் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்ற விபரம் தற்பொழுது தான் வாதிக்கு தெரியவந்தது என்றும், அதனால் அசல் வழக்கின் 3ம் பக்கம், 6வது பத்திக்கு கீழ் 6(a) மாண்புமிகு நீதிமன்றத்தில் மேற்படி சட்டத்தையும், நீதிமன்றத்தையும் மதிக்காமல், அத்துமீறி சட்டத்திற்கு புறம்பாக வாதியின் இடத்தில் பிரதிவாதிகளின் பழைய வீட்டின் வடக்குப்பக்க சுவரை தாண்டி 3 அடி அகலம், 32 அடி நீளத்திற்கு சுவர் எழுப்பி வாதிக்கு சொந்தமான இடத்தில் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மேற்படி பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பினை அகற்ற மாண்புமிகு நீதிமன்றத்தினை நாடுவதை தவிர வாதிக்கு வேறு வழியில்லை என்றும், 4ம் பக்கம், 7வது பத்தி வியாஜ்ஜியமூலத்தின் கீழிலிருந்து 5வது வரியில் சட்டத்திற்கு புறம்பாக நடந்து கொள்ளும் என்ற வரிக்கு அடுத்து 3 அடி அகலம், 32 அடி நீளத்திற்கு பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்த நாள் முதலும் என்றும், 5ம் பக்கம், 8ம் பத்தின் வழக்கு மதிப்பீட்டில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதி வாதிக்கு சொந்தம் என விளம்புகை பரிகாரத்திற்கு ரூ.5000/- எனவும் ஆக்கிரமிப்பினை அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு ரூ.1000/- என மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணமாக ரூ.225.50 என திருத்தம் செய்யும் பிராது பரிகாரத்தில் தாவா சொத்தில் பிரதிவாதிகள் 3 அடி அகலம், 32 அடி நீளத்திற்கு வாதிக்கு சொந்தமான இடத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என விளம்புகை செய்தும், பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பினை அகற்ற வேண்டுமென (Mandatory injunction) உத்தரவு பிறப்பித்தும் என்றும், தாவா பிராதை திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர் மனு உரையின் சுருக்கம்</u>**

1ம் எதிர்மனுதாரரால் தனது கணவராகிய 2ம் எதிர்மனுதாரருக்கும் சேர்த்து இந்த எதிர் மனு உரை தாக்கல் செய்யப்படுகிறது என்றும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்பதால் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக் கூடியது என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றும், மனுதாரர் 2005ம் ஆண்டு ஆவணங்களின்படி 1200 சதுரடி கிரையம் பெற்றதாகவும், அதன் பின்னர் 2014ம் வருடம் தாவா சொத்தை கிரையம் பெற்றது முதல் அனுபவித்து வருவதாகவும் அதில் வரைபட அனுமதி பெற்று அடித்தளம் கட்டி உள்ளதாக கூறியுள்ளார் என்றும், மனுதாரர்/வாதி கூறுவது போல், மேற்படி அடித்தளத்திற்கும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் கிரைய சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், கடந்த 2017ம் வருடம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நத்தம் புதிய சர்வே எண். 849/40 D3ல் கண்ட விஸ்தீரணத்தில் உள்ள சென்ட்ரிங் காரைவீட்டையும் சேர்த்து முந்தைய உரிமையாளர்களிடம் அவர்கள் குடியிருந்து வந்த வீட்டையும் முறையே மூன்று கிரைய

ஆவணங்கள் மூலம் கிரயம் பெற்றுள்ளார்கள் என்றும், முத்தம்மாள்,பேச்சியம்மாள், ஜெயலட்சுமி, வெண்ணிலா மற்றும் விஜயலட்சுமி ஆகியோர்களிடமிருந்து இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் சொத்தையும், வீட்டையும் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், அதேபோல் ஜெயலட்சுமி, சாந்தி, மஞ்சமாலை, இராம்குமார் மற்றும் சீனிவாசன் ஆகியோர்களிடமிருந்து நத்தம் புதிய சர்வே எண். 849/41ல் கண்ட 920 சதுரடியும் அதில் உள்ள கட்டிட வகையறாக்களையும் கிரையம் பெற்று பழைய கட்டிடத்தை இடித்து விட்டு. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வீடும் கடையும் கட்டியுள்ளார்கள் என்றும், வாதி கூறுவது போல் வாதியின் இடத்தில் அத்துமீறி நுழைய அவசியமில்லை என்றும், வாதியின் தாவா சொத்தையும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தையும் பிரித்து காட்டுவதற்கு புஸ்தியில் அத்துமால் உள்ளது என்றும், மனுதாரர்/வாதி வெளியூர் சென்றிருந்தபோது, அத்துமீறி பிரதிவாதிகளின் பழைய வீட்டின் வடக்கு சுவரை தாண்டி 3 அடி அகலம் 32 அடி நீளத்திற்கு சுவர் எழுப்பி ஆக்கிரமிப்பு செய்துள்ள விபரம் தற்போது தான் மனுதாரர்/வாதிக்கு தெரியவந்ததால் அதன் அடிப்படையில் மனுவில் கண்டவாறு விளம்புகை பரிகாரத்திற்கு ரூ.5000/- பிராது பக்கம் 7வது பத்தியில் 3 அடி அகலம் 32 அடி நீளத்துக்கும் என திருத்தங்கள் மேற்கொள்ளவும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும் இம்மனு தாக்கல் செய்துள்ளது அசல் வழக்கிற்கு எதிரானது என்றும், அதன் மதிப்பு வழக்கு தாக்கல் செய்த தேதியில் ரூ.10,00,000/- மேல் உள்ள நிலையில், வாதி தாக்கல் செய்த இந்த மனுவில் விளம்புகை பரிகாரத்திற்கு ரூ.5000/- என மதிப்பீடு செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும், தாவா சொத்தில் சொல்லப்பட்டுள்ள புல எண்களில் கண்ட மொத்த விஸ்தீரணத்திற்கும் விளம்புகை பரிகாரம் கோராமல் பிராதினை திருத்தம் செய்யக் கோருவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், தாவா சொத்தை 14.03.2005 மற்றும் 18.06.2014 தேதிகளில் வாதியானவர் சாந்தி என்பவரிடமிருந்து செட்டில்மெண்ட் மூலம் சொத்துரிமை அடைந்ததாகவும், பாலமேடு பேரூராட்சி வரைபட அனுமதி பெற்று அடித்தளம் கட்டி சுவர் எழுப்பியதாகவும் கூறியுள்ள நிலையில், அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தின் மதிப்பு ரூ.10,00,000/-க்கு மேல் உள்ள நிலையில், வழக்கு சொத்து மதிப்பீட்டினை குறைத்து மதிப்பிட வேண்டி வாதிக்கு பாத்தியமான சொத்தில் 3 அடி அகலம் 32 அடி நீளத்திற்கு ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக கூறி விளம்புகை பரிகாரத்திற்கு ரூ.5000/- என குறிப்பிட்டுள்ளது தவறானது ஆகும் என்றும், உண்மையான சந்தை மதிப்பு நிர்ணயம் செய்யும் பட்சத்தில் நீதிமன்ற பணவரையறை ஆளுகைக்கு அப்பாற்பட்டு விடும் என்பதால் தனது விருப்பதிற்கேற்றாற்போல தாவா பிராதை திருத்தம் செய்ய கோருவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்/வாதி 18.06.2014-ல் கிரைய பெற்றதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் தான் விளம்புகை பரிகாரம் கோர இயலும் என்றும், தற்போது காலவரையறை கடந்து விட்டதால் ஏற்புடையதல்ல என்றும், பிரதிவாதிகளை அலைகழிப்பு செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று எதிர்மனு உரை தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,

இறுதியாக,

இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

5) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

6) இம்மனுவின் அசல் வழக்கானது, மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டி நிலுவையில் உள்ள நிலையில், இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு. சமூக நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் அசல் வழக்கில் சொத்து விபரம் என்பது, "மதுரை டி, மதுரை வடக்கு ரீடி, அலங்காநல்லூர் சப்டி, வாடிப்பட்டி வட்டம், 70, நிர் பாலமேடு கிராமம், புறவில் நத்தம், குடியிருப்பு, சர்வே எண். 101A/1A நிரில் கிழமேலடி 70 தென்வடலடி 16க்கு மொத்த சதுரடி 1120 உள்ள நத்தம் காலிமனையிடத்துக்கு நான்குமால் விபரம். வடக்கே -கு. சின்னத்தம்பி கு. பெரியதம்பி நாயுடு இவர்கள் காலிமனையிடங்கள். கிழக்கே: தென்வடல் வீதி, தெற்கே: ஆ.முத்துச்சாமி நாயுடு காலிமனையிடமும், காரைவீடும். மேற்கே: கி.முத்தம்மாள் காலிமனையிடம். மேற்படி சொத்து தற்போதைய மனைவாரி தோராய பட்டா எண். 219க்கு ரீசர்வே 849/39 நிர் 65 சதுரடி மீட்டராகவும், மேற்படி பட்டாவிற்கு சேர்ந்த ரீசர்வே எண் 849/40A நிர் சதுரமீட்டர் 20 ஆகவும் உள்ளது. தாவா சொத்து மேற்படி சொத்தின் மொத்த இடத்தில் தெற்கு பக்கம் பிரதிவாதிகளின் வடக்கு பக்க சுவரைத் தாண்டி பிரதிவாதிகள் வாதிக்கு சொந்தமான கிழமேல் 3 அடி அகலம், 32 அடிநீளத்திற்கு பில்லர் போட்டு கட்டிடம் கட்ட எத்தனித்துள்ள இடம் மட்டும்."

இவ்வாறு வழக்குரையில் சொத்து விபரம் காட்டப்பட்டுள்ளது சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

8) மனுதாரர்/வாதியால் இம்மனுவின் அசல் வழக்கில் தாவா சொத்தை பொறுத்து எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் எவ்வித ஆக்கிரமிப்போ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

9) மனுதாரர்/வாதியால் இம்மனுவில் தாவா சொத்தை பொறுத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை பொறுத்தவரை, மனுதாரர்/வாதிக்கு உரிமைமூலம் பாத்தியம் கொண்ட சொத்து என்ற அடிப்படையில், விளம்புகை பரிகாரத்திற்காகவும் மற்றும் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்டுள்ள கட்டுமானத்தை அப்புறப்படுத்திட வேண்டி செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், அசல் வழக்குரையை திருத்தம் செய்திட வேண்டி பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், மனுதாரர்/வாதி வெளியூர் சென்றிருந்தபோது, அத்துமீறி பிரதிவாதிகளின் பழைய வீட்டின் வடக்கு சுவரை தாண்டி 3 அடி அகலம் 32 அடி நீளத்திற்கு சுவர் எழுப்பி ஆக்கிரமிப்பு செய்துள்ள விபரம் தற்போது தான் மனுதாரர்/வாதிக்கு தெரியவந்ததால் அதன் அடிப்படையில் மனுவில் கண்டவாறு விளம்புகை பரிகாரத்திற்கு ரூ.5000/- பிராது பக்கம் 7வது பத்தியில் 3 அடி அகலம் 32 அடி நீளத்துக்கும் என திருத்தங்கள் மேற்கொள்ளவும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும் இம்மனு தாக்கல் செய்துள்ளது அசல் வழக்கிற்கு எதிரானது என்றும், அதன் மதிப்பு வழக்கு தாக்கல் செய்த தேதியில் ரூ.10,00,000/- மேல் உள்ள நிலையில், வாதி தாக்கல் செய்த இந்த மனுவில் விளம்புகை பரிகாரத்திற்கு ரூ.5000/- என மதிப்பீடு செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், தாவா சொத்தில் சொல்லப்பட்டுள்ள புல எண்களில் கண்ட மொத்த விஸ்தீரணத்திற்கும் விளம்புகை பரிகாரம் கோராமல் பிராதினை திருத்தம் செய்யக் கோருவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்/வாதி 18.06.2014-ல் கிரைய பெற்றதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் தான் விளம்புகை பரிகாரம் கோராமல் காலவரையறைக்கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர் மனு உரையில் தாக்கல் செய்யப்பட்டு வாதுரைக்கப்பட்டுள்ளதையும் சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

11) கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச்சட்டம் என்பது.

கட்டளை 6 விதி 17 வாதுரைகளை திருத்துதல்
**வழக்குரைகளை திருத்துதல்- நீதிமன்றம் நடவடிக்கைகளின் எந்தக் கட்டத்திலும் நியாயமாக இருக்கலாகும் முறையிலும் நிபந்தனைகளின் பேரிலும் இருதரப்பினரில் எவர் ஒருவரையும் அவருடைய வழக்குரைகளை மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு அனுமதிக்கலாம். மேலும் தரப்பினர்களிடையே விவாதத்திலுள்ள உண்மையான பிரச்சினைகளை தீர்மானிக்கும் பொருட்டு எத்தகைய திருத்தங்கள் அவசியமாக இருக்காலகுமோ அத்தகைய திருத்தங்கள் எல்லாம் செய்யப்படுதல் வேண்டும்.**

**வரம்புரையாக: மிகவும் கவனமாக இருந்தும், வழக்கு தரப்பினர் அந்த விடயத்தை விசாரணைக்கு முன் எழுப்ப முடியவில்லை என்ற முடிவுக்கு நீதிமன்றம் வந்தாலன்றி, வழக்குரையில் திருத்தஞ் செய்வதற்கான விண்ணப்பத்தை விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றம் அனுமதிக்கக்கூடாது.**

இவ்வாறு உரிமையியல் நடைமுறைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ளதை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

12) இம்மனுவின் அசல் வழக்கில் இருதரப்பிலும் சாட்சி விசாரணைகள் தொடங்கப்படவில்லை. சாட்சி விசாரணைகள் தொடங்கப்படுவதற்கு முன்பே வழக்குரையை திருத்தம் செய்திட வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13) எதிர்மனுதாரர்/பிரதிவாதியால், இம்மனுவில் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள ஆட்சேபணை சங்கதிகளை பொறுத்தவரை அசல் வழக்கில், ஆவணங்கள் மற்றும் சாட்சிய விசாரணை மூலம் தெளிவுப்படுத்திக்கொள்ளப்பட வேண்டியது என இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், தாவா சொத்திற்குண்டான பண அதிகார வரம்பை பொறுத்தவரை எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் கடந்த 30.08.2018 தேதியில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரைக்கு பின்னிட்டு தான் இந்திய காலவரையறைச் சட்டம் பிரிவு 58ன் படி மூன்று வருடகாலத்திற்குள் மனுதாரர்/வாதியால் இந்த திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

14) மேலும் உயர்நீதிமன்ற தீர்ப்புரையில்,

2006(5) CTC 609 IN THE HIGH COURT OF MADRAS

Hi, Sheet Industries, a partnership firm carrying on business at 61-D, D.V Road, Ambur Town, Vellore District (v) Litelon Limited, having its Office at No. 68, Sipcot Industrial Complex,, Hosur, rep. by its Managing Partner, S. Gokul and others.

The Supreme Court, in para 9 of the Baldev Singh case, categorically observed as follows:

(9) ....... From a bare perusal of this provision, it is pellucid that Order 6, Rule 17 of the Code of Civil Procedure consists of two parts. The first part is that the Court may at any stage of the proceedings allow either party to amend his pleadings and the second part is that such amendment shall made for the purpose of determining the real controversies raised between the parties. Therefore, in vies of the provisions made under Order 6, Rule 17, C.P.C., it cannot be doubted that wide power and unfettered discretion has been conferred on the Court to allow amendment of the pleading to a party in such manner and on such terms as it appears to the Court just and proper. While dealing with the prayer for amendment, it would also be necessary to keep in mind that the Court shall allow amendment of pleadings if it finds that delay in disposal of suit can be avoided and that the suit can be disposed of expeditiously.'

Lordship Dr. Justice AR. Lakshmanan, through an authoritative and elaborate discussion on Order 6, Rule 17, C.P.C ., in Rajesh Kumar Aggarwal's case, held as follows:

"Para 15: The object of the rule is that the Courts should try the merits of the case that come before them and should, consequently, allow all amendments that may be necessary for determining the real question in controversy between the parties provided it does not cause injustice or prejudice to the other side.

Para 16: Order 6 Rule 17, consists of two parts. Whereas the first part is discretionary (may) and leaves

it to the Court to order amendment of pleading. The second part is imperative (shall ) and enjoins the Court to allow all amendments which are necessary for the purpose of determining the real question in controversy between the parties.

Para 17: In our view, since the cause of action arose during the pendency of the suit, proposed amendment ought to have been granted because the basic structure of the suit has not changed and that there was merely change in the nature of relief claimed.

Para 18 Ad discussed above, the real controversy test is the basic or cardinal test and it is the primary duty of the Court to decide whether such an amendment is necessary to decide the real dispute between the parties. It is it, the amendment will be allowed; if it is not, the amendment will be refused......... the Court should also take notice of subsequent events in order to shorten the litigation, to preserve and safeguard the rights of both parties and to subserve the ends of justice. It is settled by a catena of decisions of this Court that the rule of amendment is essentially a rule of justice,equity and good conscience and the power of amendment should be exercised in the larger interest of doing full and completer justice to the parties before the Court.

Para 19: While considering whether an application for amendment should or should not be allowed, the Court should not go into the correctness or falsity of the case in the amendment. Likewise, it should not record a finding on the merits of the amendment and the merits of the amendment sought to be incorporated by way of amendment are not to be adjudged at the stage of allowing the prayer for amendment."

The Proviso to Order 6, Rule 17 of Act 22 of 2002 is applicable to the pleadings instituted with effect from 01.07.2002 and not to the pleadings instituted prior to 01.07.2002 and while considering the proviso to Order 6, Rule 1`7,the Court has to examine in detail and commencement of trial must be understood as final hearing of the Suit i.e., examination of witnesses, filing of documents addressing of arguments, etc, and the Court should not forget its unfettered discretion to allow the amendment after applying itself the judicial discretion, if there is no negligence on the part of the party.

மேலும், மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்புரையில்,

***In Mahila Ramkali Devi & Ors Vs. Nandram (Dead) through Legal Representatives & Ors.(2015)13 SCC 132***

***"20. It is well settled that rules of procedure are intended to be a handmaid to the administration of justice, A party cannot be refused just relief merely because of some mistake, negligence, inadvertence or even infraction of rules of procedure. The court always gives relief to amend the pleading of the party, unless it is satisfied that the party applying was acting malafide or that by his blunder he had caused injury to his opponent which cannot be compensated for by an order of cost.***

***21. In our view, since the appellant sought amendment in Para 3 of the original***

***plaint, the High Court ought not to have rejected the applications***

***22. In Jai Jai Ram Manohar Lal V. National Building material Supply (1969 AIR 1267), this Court held that the power to grant amendment to pleadings is intended to serve the needs of justice and is not governed by any such narrow or technical limitations.***

இவ்வாறு மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ள கருத்துரைகளை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

15) ஆகவே, மனுவில் திருத்தம் செய்ய வேண்டி சொல்லப்பட்டுள்ள சங்கதிகளான திருத்தம் என்பது அசல் வழக்கின் உண்மையான பொருண்மையை மாற்றம் செய்யும் விதத்திலோ புதிய வழக்கு மூலத்தை ஏற்படுத்தும் விதத்திலோ அமையவில்லை என்று சமூக நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது. மேற்படி, இம்மனுவின் அசல்வழக்கில் திருத்தம் செய்யக்கூடிய சங்கதிகளை பொறுத்து வரை மனுதாரர்/வாதியால் அசல் வழக்கில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் கீழ் நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார்.

16) ஆகவே, இம்மனுவானது அசல் வழக்கின் தன்மை கருதியும், இம்மனுவின் தன்மை கருதியும் நீதியின் நலன் கருதியும், அசல் வழக்கை காலதாமதம் செய்திடக்கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு, மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நிரூபணம் செய்யப்பட்டதாக சமூக நீதிமன்றத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு இம்மனு அனுமதித்து உத்தரவு பகரப்படுகிறது.

இறுதியாக,

இம்மனு செலவு தொகையின்றி அனுமதித்து உத்தரவு பகரப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:** இல்லை

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.